நவராத்திரி கொலு பொம்மைகள் விற்பனை தீவிரம்



நவராத்திரி விழாவையொட்டி திருச்சி பூம்புகார் விற்பனையகத்தில் வெள்ளிக்கிழமை கொலு பொம்மைகளை பார்வையிட்ட பொதுமக்கள்.

திருச்சி, அக். 9: நவராத்திரி விழா அக்.11-ஆம் தேதி முதல் தொடங்க வுள்ளதை முன்னிட்டு கொலு பொம்மைகள் விற்பனை திருச்சி பூம்பு கார் விற்பனை நிலையத்தில் விறுவிறுப்பாக நடைபெறுகிறது.

திருச்சி சிங்காரதோப்பில் செயல்பட்டு வரும் பூம்புகார் விற்பனை நிலையத்தில் வழக்கம் போல் இந்தாண்டும் நவராத்திரியை முன்னிட்டு கடந்த செப்.23-ஆம் தேதி முதல் அக்.31-ஆம் தேதி வரை (ஞாயிற்றுக் கிழமை உள்பட) கொலு கண்காட்சி நடைபெற்று வருகிறது. இக் கண் காட்சியின் சிறப்பு அம்சமாக பலவித கொலு பொம்மைகள், கொலு செட்டுகள், கொண்டபள்ளி பொம்மைகள், மரப்பாச்சி பொம்மைகள், காகிதக்கூழ் பொம்மைகள், மண், பளிங்குக்கல், மாக்கல், நவரத்தின கற்க ளினாலான பொம்மைகள் குறைந்த பட்சமாக ரூ.50 முதல் ரூ.1.20 லட் சம் வரையில் இடம்பெற்றுள்ளன.

இக் கண்காட்சியில், மலைக்கோட்டை, தஞ்சை பெரியகோயில், பழனி மலை, திருத்தணி, தங்கத் தேர், அம்மன் தேர், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், அஷ்ட பைரவர் செட் உள்ளிட்ட பொம்மைகள் இடம்பெற்றுள்ளன. மேலும், கொல்கத்தா, மணிப்பூர், ராஜஸ்தான் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பொம் மைகள் எண்ணற்ற தனி பொம்மைகளும் பலவிதமான மாடல்களில் வண்ணங்களில் இடம் பெற்றுள்ளன.

இதுதொடர்பாக, பூம்புகார் விற்பனை நிலையமேலாளர் (பொறுப்பு) ஜெ. காயத்ரி கூறுகையில், அனைத்து பொம்மைகளுக்கும் 10 விழுக் காடு சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது. பல்வேறு மாநிலங்களிலி ருந்து தருவிக்கப்பட்டுள்ள அழகிய கொலு பொம்மைகளை பொது மக்கள் வாங்கி தங்கள் இல்லத்துக்கு அழகூட்டி, வரும் நவராத்திரி பண் டிகையை கொண்டாடி மகிழ வேண்டும். ஊரக மற்றும் நகர்புறத்தில் உள்ள நலிவடைந்த கலைஞர்களால் தயாரிக்கப்பட்ட கலைப் பொருள் களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றார் அவர்.

இடைத்தேர்தல் வெற்றி: தவெக-வினர் கொண்டாட்டம்

திருச்சி, அக். 9: இடைத்தேர்தலில் தவெக வெற்றி பெற்றதையடுத்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அக் கட்சியினர் வெள்ளிக்கிழமை பட்டாசு வெடித்து, இனிப்புகளை வழங்கி கொண்டாடினர்.

தாராபுரம், மதுராந்தகம் சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்வாக்குஎண்ணிக்கைவெள்ளிக்கிழமைகாலைதொடங் கியது. இரு தொகுதிகளிலும் அக்கட்சியின் வேட்பாளர்களான சத் தியபாமா மற்றும் மரகதம் குமரவேல் ஆகியோர் முன்னிலை பெற்று வெற்றி பெற்ற நிலையில், தமிழகம் முழுவதும் உள்ள தவெக தொண் டர்கள் பட்டாசு வெடித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி தங் களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இதன் ஒரு பகுதியாக, பாலக்கரையில் முன்னாள் மாவட்ட தலைவர் ஆர்.கே. ராஜா தலைமையில் அக் கட்சியினர், சரவெடிகள் வெடித்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி கோயில் ராஜ கோபுரம் முன்பு, அக்கட்சி சார்பில் வெற்றி கொண்டாட்டம் நடை பெற்றது. ஸ்ரீரங்கம் பகுதி செயலர் பால்பாண்டி தலைமையில் நடை பெற்ற நிகழ்வில், மாநகர் மாவட்ட பொருளாளர் வெங்கடேஷ் பாபு உள்ளிட்ட பல்வேறு அணிகளின் நிர்வாகிகளும், தொண்டர்களும் திரளாக கலந்துகொண்டனர். ராஜகோபுரம் முன்பு பட்டாசுகள் வெடித்து, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். இதேபோல, மாநகரப் பகுதி மட்டுமின்றி மாவட்டம் முழுவதும் அக் கட்சியின் நிர்வாகிகளும், தொண்டர்களும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இருள் சூழ்ந்தப் பகுதிகள் கணக்கெடுப்பு

மாநகரில் 3,450 தெருவிளக்குகள் பொருத்தத் திட்டம்

நமது நிருபர்

திருச்சி, அக். 9: திருச்சி மாநகராட் சியில் 838 இருள் சூழ்ந்தப் பகுதி கள் கணக்கெடுக்கப்பட்டுள்ள நிலையில், அப்பகுதிகளில் ரூ. 8 கோடியில் 3,450 தெரு விளக்கு கள் பொருத்த திட்டமிடப்பட் டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற திருச்சி மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள், பல இடங்க ளில் தெரு விளக்குகள் இல்லை. அவற்றை உடனடியாக பொருத்த வேண்டும். மின் விளக்குகளை சரிவர பராமரிக்க வேண்டும் என வலியுறுத்திப் பேசினர்.

திருச்சி மாநகராட்சியில் 5 மண்டலங்களில் உள்ள 65 வார் டுகளில் சுமார் 12 லட்சம் மக் கள் வசித்து வருகின்றனர். மாநக ராட்சியில் ஏற்கெனவே குறுகிய தெருக்களில் 20 வாட்ஸ் எல்இடி மின்விளக்குகள் 31,504-ம், முக் கிய சாலைகளில் 90 வாட்ஸ் எல் இடி மின்விளக்குகள் 8,547-ம், பெரிய சந்திப்புகளில் 120 வாட்ஸ் எல்இடி மின்விளக்குகள் 3,370-ம், முக்கிய சந்திப்புகளில் இதர உயர் கோபுர மின்விளக்குள் என மொத்தம் 52,681 மின்விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன.

திருச்சி மாநகராட்சியின் தெரு விளக்குப் பராமரிப்புப் பணிகள் தனியாரிடம் வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட மின்விளக் குகளில் 5,000 முதல் 10,000 வரை யிலான மின்விளக்குகள் போதிய பராமரிப்பின்றி எரியாத நிலை யில் உள்ளதாகவும், அவற்றைப் பராமரிக்க போதுமான ஆள் களை தனியார் ஒப்பந்த நிறுவ னம் நியமிக்கவில்லை என்றும் மாமன்ற உறுப்பினர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். அதே சமயம், மாநகரின் பல இருள் சூழ்ந்தப் பகுதிகளில் போதிய மின்விளக் குகள் பொருத்த வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருகின் றனர்.

மாநகராட்சி கணக்கெடுப்பு: இதனை ஏற்று மாநகராட்சி நிர் வாகம் சில வாரங்களுக்கு முன்பு மாநகராட்சியின் இருள் சூழ்ந் தப் பகுதிகளை கணக்கெடுத்தது. இதன்படி, திருச்சி மாநகராட்சி யில் 838 இருள் சூழ்ந்தப் பகுதிகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் 2,271 எண்ணிக் கையிலான 40 வாட்ஸ் எல்இடி மின்விளக்குகளும், 445 எண்ணிக் கையிலான 90 வாட்ஸ் எல்இடி மின்விளக்குகளும் என மொத்தம் 2,716 மின்விளக்குகள் எரியாமல் உள்ளன.

அரசுக்கு கருத்துரு: இருக்கும் மின்கம்பங்களில் பொருத்தப்பட வேண்டிய மின்விளக்குகள் 1,399, புதிய மின்விநியோக தடத்தில் உள்ள மின்கம்பங்களில் பொருத் தப்பட வேண்டிய மின்விளக்கு கள் 933, புதிய மின்விநியோக தடத்தில் உள்ள புதிய மின்கம்பங் களில் பொருத்தப்பட வேண்டிய மின்விளக்குகள் 718, எண்கோண மின்கம்பங்களில் பொருத்தப்பட வேண்டிய 90 வாட்ஸ் மின்விளக் குகள் 200, எண்கோண மின்கம் பங்களில் பொருத்தப்பட வேண் டிய 150 வாட்ஸ் மின்விளக்குகள் 200 என 457 எண்ணிக்கையிலான 20 வாட்ஸ் மின்விளக்குகள், 1,032 எண்ணிக்கையிலான 40 வாட்ஸ் மின்விளக்குகள், 1,761 எண்ணிக் கையிலான 90 வாட்ஸ் மின்விளக் குகள் என மொத்தம் 3,450 மின்வி ளக்குகள் பொருத்தப்பட வேண் டும். இதற்காக ரூ. 8 கோடி கேட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட் டுள்ளது என மாநகராட்சி அலு வலர்கள் தெரிவித்தனர்.

அனுமதி அளித்தவுடன் பொருத்தம்: இது குறித்து மேயர் மு. அன்பழகன் கூறுகையில், மாநகராட்சியின் பல இடங்க ளில் தெருவிளக்குகளின் தேவை யுள்ளது. பொதுமக்கள் பல ரும், மாமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து கோரிக்கை விடுத்த தின் பேரில் ரூ. 8 கோடியில் மின் விளக்குகள் கேட்டு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அரசு அனுமதியளித்ததும் இருள் சூழ்ந்தப் பகுதிகளில் விரைவில் புதிய மின்விளக்குகள் பொருத் தப்படும் என்றார்.

பராமரிப்புக்கு போதிய ஆள்கள் இல்லை

மாநகராட்சியின் தெரு விளக்குகள் பராமரிப்பு என்பது தனியா ரிடம் விடப்பட்டுள்ள நிலையில், 5 வார்டுக்கு ஒருவர் என்ற நிலை யிலேயே எலக்ட்ரீஷியன்கள் பணியாற்றி வருகின்றனர். இதனால் இருக்கும் மின்விளக்குகளை முறையாக பராமரிக்க முடியாமல், பல இடங்களில் மின்விளக்குகள் எரியாத நிலையில் உள்ளன.

இந்நிலையில், புதிதாக மின்விளக்குகளைப் பொருத்தினால் தனி யார் ஒப்பந்த நிறுவனம் முறையாக பராமரிக்குமா என்பது கேள் விக்குறியே. எனவே, போதுமான எலக்ட்ரீஷியன் உள்ளிட்ட ஆள் களை நியமித்து பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள மேயரும், ஆணையரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாமன்ற உறுப்பி னர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இருள் சூழ்ந்தப் பகுதிகள் விவரம்: (கோட்டம்)

ஸ்ரீரங்கம் – 172, அரியமங்கலம் – 151, திருவெறும்பூர் – 190, பொன்மலை – 148, அபிஷேகபுரம் – 177 இந்த இருள் சூழ்ந்தப் பகுதிகள் 81,480 மீட்டரில் உள்ளன.

‘ஸ்மார்ட் மீட்டருக்கு’ எதிர்ப்பு மின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

திருச்சி, அக். 9: ஸ்மார்ட் மீட்டருக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக் கைகளை வலியுறுத்தி மின் ஊழியர்கள் திருச்சியில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

டிஎன்இபி எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சார்பில், திருச்சி தென்னூரில் உள்ள மின்வாரிய அலுவல கம் முன் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட் டத்துக்கு, அமைப்பின் தலைவர் சத்யநாராயணன் தலைமை வகித்தார்.

கோரிக்கைகளை விளக்கி அமைப்புச் செயலர் அன் புச் செல்வன் பேசியதாவது: தமிழ்நாடு மின்சார வாரி யத்தில் தமிழகம் முழுவதும் உள்ள 12 மண்டலங்க ளிலும் ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவதற்கு தவெக அரசு டெண்டர் வெளியிட்டுள்ளது. கடந்த காலத்தில் ஸ்மார்ட் மீட்டர் நிறுவுவதற்கு ஒப்பந்தம் கோரப்பட் டபோது அனைத்துத் தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித் ததால் அந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. தவெக அரசு அமைந்த பிறகு முதலில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தப்படாது என்று அறிவிப்பு வெளியிட்டிருந் தது. ஆனால், மத்திய அரசின் அழுத்தத்தின் காரண மாக தற்போது தமிழ்நாடு மின்வாரியத்தில் 70 சதவீத மின் இணைப்புகளில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவ தற்கு மீண்டும் ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இதன் மூலமாக தனியார் நிறுவனங்கள் ஸ்மார்ட் மீட்டர் பொருத்த அனுமதிக்கப்படுவார்கள், பொதுத் துறை மின்வாரியம் தனியார்மயமாக்கப்படும்.

இதனால் மின்கட்டணம் கடுமையாக உயர்வது டன், மின் மானியங்களும் ரத்தாகும் அபாயம் உள் ளது. எனவே, பொதுமக்களைப் பாதிக்கும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண் டும் என்றார் அவர். ஆர்ப்பாட்டத்தில், கணக்கீட்டுப்ப ணியை தனியாரிடம் ஒப்படைப்பதை கைவிட வேண் டும்; காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். தனியார் மயமாக்குவதைத் திரும்பப் பெற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை கள் வலியுறுத்தப்பட்டன.

நல்லாட்சிக்கு மக்கள் கொடுத்த அங்கீகாரம் இடைத்தேர்தல் வெற்றி



திருச்சி, அக். 9: நல்லாட்சிக்கு மக்கள் கொடுத்த அங்கீகாரம் இடைத்தேர்தல் வெற்றி என்றார் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் எம்எல்ஏவும், சிறுபான் மையினர் நலத் துறை அமைச்சரு மான ஏ. எம். ஷாஜகான்.

இதுகுறித்து திருச்சியில் வெள் ளிக்கிழமை அவர் செய்தியாளர்க ளிடம் கூறியதாவது:

முதல்வர் ஜோசப் விஜய்யின் நல்லாட் சிக்கு அங்கீகாரச் சான்றிதழ் வழங்கும் வகையில் மக்கள் இடைத்தேர்தலில் வெற் றியை தந்துள்ளனர். கடந்த தேர்தலில் இந்த 2 தொகுதிகளிலும் தவெக வெற்றி வாய்ப்பை இழந்திருந்த நிலையில், தற் போது மிகப்பெரிய வாக்கு சதவீதத்தை பெற்று மக்கள் இந்த ஆட்சியின் பக்கம் இருக்கின்றனர் என்பதை இந்த முடிவு பறைசாற்றுகிறது. வாக்களித்த பெருமக்களுக்கு நன் றியையும், முதல்வருக்கு வாழ்த்து களையும் தெரிவித்துக் கொள்கி றேன்.

அரசு இயந்திரத்தை தவறாக பயன்படுத்தி வெற்றி பெற்றதாக எடப்பாடி கே. பழனிசாமி கூறு வது புறந்தள்ளக்கூடியது. ஏற்கெனவே அதிமுக வென்ற தொகுதிகளுக்கு நடந்த இடைத்தேர்தலில் அதிமுக மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளதால் அவர் அப்படி பேசியுள்ளார். இது மதச்சார் பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணியின் வெற்றி என்றார் அவர்.

இடைத்தேர்தல் வெற்றி கூட்டணியின் முதல் வெற்றி



திருச்சி, அக். 9: இடைத்தேர்தல் வெற்றியானது மதசார்பற்ற சமூக நீதி வெற்றிக் கூட்டணியின் முதல் வெற்றி என்றார் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அகில இந்திய தலை வர் கே.எம். காதர் மொகிதீன்.

இதுகுறித்து அவர் திருச்சியில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்க ளிடம் கூறியதாவது:

தமிழகத்தில் மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி அமைக்கப்பட்ட பிறகு நடந்த முதல் தேர்தலான மதுராந் தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் நாங் கள் வெற்றி பெற்றுள்ளோம். இந்த வெற் றிக் கூட்டணியின் வரலாறு தற்போது தொடங்கியுள்ளது. வெற்றியை வழங்கிய தொகுதி மக்களுக்கு நன்றியை தெரிவித் துக் கொள்கிறோம். ஊழலற்ற ஆட்சியை தருவோம் எனக் கூறியதுடன் நிற்காமல், அதற்கான முயற்சிகளை செய்யும் முதல் வராக ஜோசப் விஜய் இருக்கிறார். அதன் விளைவுதான் இந்த வெற்றி.

தேர்தல் விதிகளால் முடியாத, தாய்மா மன் தங்க மோதிர திட்டம், மகளிர் இல வச பேருந்து பயணத் திட்டங் களை இந்த 2 தொகுதிகளில் அமல்படுத்தியிருந்தால் வாக்கு வித்தியாசம் இன்னும் அதிகமாக இருந்திருக்கும். துரோகத்துக்கு கிடைத்த இடைக்கால வெற்றி என ஸ்டாலின் கூறியுள்ளாரே என்ற கேள்விக்கு, எதிர்க்கட்சித் தலைவர் அப்படித்தான் கூறு வார். குடியரசுத் தலைவர் ஆட்சி வந்து விடக்கூடாது என்பதற்காகவே நாங்கள் தவெகவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை கொடுத்தோம். அதற்கு பணம் வாங்கிய வரலாறும் கிடையாது, துரோகம் செய்த வரலாறும் கிடையாது.

கூட்டணி இல்லாமல் தனித்து நின்றி ருந்தால் வெற்றி சாத்தியமா? என்ற கேள் விக்கு, தமிழக வரலாறு கூட்டணியை வைத்துத்தான் இருக்கிறது. வெற்றி என் பது கூட்டணியின் வெற்றி. ஒரு வாக்கு விழுந்தாலும், அது கூட்டணியின் வாக் குதான். இது மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணியின் வெற்றி என்றார் அவர்.

திருச்சி ரயில் நிலையத்தில் மரக்கன்றுகள் நடும் விழா

திருச்சி, அக். 9: திருச்சி கோட்ட ரயில்வே நிர்வாகம், பிளான்ட் ஏ பில் லியன் ட்ரீஸ் (பிஏபிடி) அமைப்புடன் இணைந்து நடத்திய மரக்கன்றுகள் நடும் விழா திருச்சி ரயில் நிலையத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், திருச்சி கோட்ட ரயில்வே மேலாளர் பாலக்ராம் நெகி மரக்கன் றுகளை நட்டு நிகழ்வைத் தொடங்கி வைத்தார். இதில், பிஏபிடி அமைப்பின் நிறுவனர் சைலேந்திரகுமார் சிவகுமார், ரயில்வே உயரதிகாரிகள் கலந்துகொண் டனர். பிஏபிடி அமைப்பானது, ரயில் வேக்கு சொந்தமான இடங்களில் 1.25 லட்சம் மரக்கன்றுகளை நடுவதற்காக தெற்கு ரயில்வேயுடன் கூட்டு உடன்ப டிக்கை செய்துள்ளது. இதன் ஒரு பகுதி யாக, திருச்சி கோட்ட ரயில்வே நிர்வா கத்தின் கீழ் வரும் திருச்சி சந்திப்பு ரயில் நிலையத்தில் மரக்கன்றுகள் நடப்பட் டன. அப்போது, ஸ்வச்சதா பக்வாடா என்ற திட்டத்தின் கீழ், ரயில் நிலைய வளாகத்தில் கல்லூரி மாணவர்களு டன் தூய்மைப்பணிகளும் மேற்கொள் ளப்பட்டன.

2030-ஆம் ஆண்டுக்குள் 'நிகர பூஜ் ஜிய கார்பன் உமிழ்வு' என்ற இலக்கை அடையும் ரயில்வே அமைச்சகத் தின் குறிக்கோளுக்கேற்ப, சுற்றுச்சூ ழல் நிலைத்தன்மையை மேம்படுத்த ரயில்வே வளாகங்களில் மரக்கன்று களை நட்டு பராமரிக்கும் பொறுப்பை பிஏபிடி அமைப்பு மேற்கொண்டு வரு கிறது என ரயில்வே அதிகாரிகள் தெரி வித்தனர்.

இருவேறு விபத்துகளில் இருவர் உயிரிழப்பு

திருச்சி, அக். 9: திருச்சியில் இருவேறு இடங்களில் நேரிட்ட விபத்துகளில் ஒடிசாவைச் சேர்ந்த சமையல் தொழி லாளர் உள்பட இருவர் உயிரிழந்தனர்.

ஒடிசா மாநிலம், பாலேஸ்வரைச் சேர்ந்தவர்கள் என். சீதாராம் பிரதான் (36) மற்றும் பி. சிபு பிரசாத் தாஸ் (33), சமையல்தொழிலாளர்கள். இருவரும் திருச்சி காஜா நகரில் தங்கி மன்னார் புரத்தில் உள்ள ஹோட்டலில் பணி யாற்றி வந்தனர்.

இந்நிலையில், வியாழக்கிழமை நள்ளிரவு 11.30 மணி அளவில் வேலையை முடித்துவிட்டு இருவரும் தங்களது அறைக்கு இருசக்கர வாக னத்தில் சென்றுகொண்டிருந்தனர். வாகனத்தை சீதாராம் பிரதான் ஓட்டி யுள்ளார். திருச்சி - புதுக்கோட்டை சாலையில் ஐஜி அலுவலகம் அருகே சென்றுகொண்டிருந்தபோது திடீ ரென கட்டுப்பாட்டை இழந்த இரு சக்கர வாகனம் சாலையின் மையத் தடுப்பு மீது மோதியது.

இதில், சீதாராம் பிரதானுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. சிபு பிரசாத் தாஸுக்கும் லேசான காயம் ஏற்பட் டது. இதையடுத்து, அவ்வழியே சென் றவர்கள் இருவரையும் மீட்டு திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களை பரி சோதனை செய்த மருத்துவர்கள் சீதா ராம் பிரதான் வரும் வழியிலேயே உயி ரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர். சிபு பிரசாத் தாஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதுகு றித்து திருச்சி தெற்கு போக்குவரத்துப் புலனாய்வுப் பிரிவு போலீஸார் வழக் குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

சுமை வாகனம் மோதி முதியவர் உயிரிழப்பு: மணப்பாறையைச் சேர்ந் தவர் யா. முபாரக் அலி (61). இவர், வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி அளவில் திருச்சி தில்லை நகர் 5-ஆவது குறுக்குத் தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது, பின்னால் அதிவேகமாக வந்த சுமை வாகனம் முதியவர் மீது மோதியது. இதில், பலத்த காயமடைந்த அவர் சம் பவ இடத்திலேயே உயிரிழந்தார். தக வலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார், சடலத்தை மீட்டு உடற்கூ றாய்வுக்காக திருச்சி அரசு மருத்துவம னைக்கு அனுப்பிவைத்தனர்.

இதுகுறித்து திருச்சி வடக்குப் போக் குவரத்துப் புலனாய்வுப் பிரிவு போலீ ஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்ற னர்.

கனரா வங்கி
தலைமை அலுவலகம் - பெங்களூரு - சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I

வேது தளம், கனரா டவர்ஸ், 524, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600018.
தொலைபேசி எண். 044 - 2433 9160, 2435 0042
மின்னஞ்சல் : ch2361@canarabank.com

சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள **கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை-ன்** அதிகாரபூர்வ அதிகாரியானவர், கடனீட்டுச் சொத்துக்களை சொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் (தூலமாக்கம்) மீதான உரிமை தூலமாக்கம் சட்டம் பிரிவு 13(12) மற்றும் விதி 3ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க (2002ல் சட்டம் 54) சட்டத்தின் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே விவரிக்கப் பட்டுள்ள **கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: 1. M/s. ORCA பெயிண்ட்ஸ் (கடன்தாரர்)** 922B2, புதுச்சத்திரம், அமரம்பேடு, குன்றத்தூர், காஞ்சிபுரம்-600069 **2) திரு. இல்மாயில் முகமது அலி (கடன்தார் & ஜாமீன்தார்)** எண்.17, நாடார் மேன் மேற்கு, சிந்தாமணி பழைய கரூர் சாலை, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி 620002, **3) திரு.உதயகுமார் (கடன்தார் & ஜாமீன்தார்)** வடக்குத் தெரு, T கிருஷ்ணாபுரம், பேரையூர், மதுரை - 625705, ஆகியோர்களுக்கு **06/06/2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி **கனரா வங்கி, சென்னை தியாகராயா நகர் கிளைக்கு** செலுத்தவேண்டிய கடன் தொகையான **ரூ. 2,54,63,772.48** (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்து நான்கு லட்சத்து மூன்றாயிரத்து எழுநூற்று எழுபத்து இரண்டு மற்றும் பைசா நாற்பத்து எட்டு மட்டும்) மற்றும் எதிர்கால வட்டியுடன் சேர்த்து இந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார். **இந்தக் கணக்கு, தற்போது எங்கள் சொத்து மீட்பு மேலாண்மை கிளை – I, சென்னை கிளைக்கு மாற்றப்பட்டுள்ளது.**

கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பாக்கித் தொகையை திரும்ப செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்கு தொடர்புடைய 8 மற்றும் 9வது விதிகின் கீழ் கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, 5வது தளம், கனரா டவர்ஸ், எண்.524, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018 அதிகாரப்பூர்வ அதிகாரியாவர் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **08.10.2025** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்டம் பிரிவு 13(8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்/ஜாமீன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

கடன்தாரர்/ ஜாமீன்தாரருக்கும் குறிப்பாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப் படுவதாவது சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவ்வித பேரமும் வைத்துக்கொள்ளக் கூடாது மீறி வைத்துக் கொண்டால் அது கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, வேது தளம், கனரா டவர்ஸ், எண்.524, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018க்கு செலுத்தப்பட வேண்டிய **06.10.2025** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ. 2,70,03,067.34** (ரூபாய் இரண்டு கோடியே எழுபது லட்சத்து மூவாயிரத்து அறுபத்தேழு மற்றும் பைசா மும்பத்து நான்கு மட்டும்) மேலும் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

அசையாச் சொத்தின் விவரங்கள்

மூல ஆவணதாரர் பெயர்: திரு. இல்மாயில் முகமது அலி: சொத்தின் அட்டவணை: வகை எண்.1: திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், திருச்சி நகர் இணை எண்.3 SRO, சிந்தாமணி கிராமம், புதிய வார்டு - A, பிளாக் எண்.20, புதிய T.சர்வே எண்.16, இல் அமைந்துள்ள பரப்பளவு 7858 சதுர அடி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து நுண்பு மற்றும் பகுதி எல்லைகள்: கிழக்கில்: T.சர்வே எண்.17; மேற்கில்: T. சர்வே எண்.15, வடக்கில்: T. சர்வே எண்.16-பகுதி, தெற்கில்: T. சர்வே எண்.21(கால்பாம்): ஆகியவற்றிற்கு இடையில் கிழக்கு மேற்காக வட புறம் - 61 அடி, தென் புறம் - 61.2அடி மற்றும் வடக்குத் தெற்காக கிழக்கு புறம் - 122 அடி, மேற்கு புறம் - 113 அடி, மொத்தப் பரப்பளவு 7858சதுர அடி, (730.03 சதுர மீட்டர்கள்) விஸ்தீரணம் கொண்ட நிலம் காலி வீட்டு மனை அதனுடன் அதன் நடைமுறை உரிமைகள் மற்றும் அனைத்து எளிய உரிமைகள். திருச்சிராப்பள்ளி நகர மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட கரூர் பைபாஸ் சாலை (வாட்டர் டேங்க்-பைபாஸ் பிரிட்ஜ்) இல் அமைந்துள்ள சொத்து. **வகை எண்.2:** திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், திருச்சி நகர் இணை எண்.3 SRO, சிந்தாமணி கிராமம், நகராட்சி பழைய வார்டு - 5, சிந்தாமணி பழைய நகர சர்வே எண்.807/2,807, பழைய நகர சர்வே எண்.648/1, பழைய நகர சர்வே எண்.649 மற்றும் 650/1, தொடர்புடைய புதிய வார்டு - A, பிளாக் எண்.20, புதிய T. சர்வே எண்.16. இல் அமைந்துள்ள பரப்பளவு 8058சதுர அடி கொண்ட காலி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து நுண்பு மற்றும் பகுதி. எல்லைகள்: கிழக்கில்: புதிய நகர சர்வே எண்.18/1, மேற்கில்: புதிய T. சர்வே எண்.15, வடக்கில்: புதிய T.சர்வே எண்.16-பகுதி; தெற்கில்: திரு. ஏழாலான் அவர்களின் உரிமையிற்ற நிலம் புதிய T.சர்வே எண்.16-பகுதி; ஆகியவற்றிற்கு இடையில் கிழக்கு மேற்காக வட புறம் - 86.3அடி, தென் புறம் - 85.2அடி மற்றும் வடக்குத் தெற்காக கிழக்கு புறம் - 97.5அடி மற்றும் மேற்கு புறம் - 90.5அடி மொத்தப் பரப்பளவு 8058 சதுர அடி (748.61சதுர மீட்டர்கள்) விஸ்தீரணம் கொண்ட நிலம் காலி வீட்டு மனை அதனுடன் அதன் நடைமுறை உரிமைகள் மற்றும் அனைத்து எளிய உரிமைகள். திருச்சிராப்பள்ளி நகர மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட கரூர் பைபாஸ் சாலை (வாட்டர் டேங்க்-பைபாஸ் பிரிட்ஜ்) இல் அமைந்துள்ள சொத்து. **வகை எண்.3:** திருச்சி பதிவு மாவட்டம், திருச்சி நகர் இணை எண்.3 SRO, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி வட்டம், சிந்தாமணி கிராமம், தென்புற வரிசையின் பழைய கரூர் சாலை, பழைய நகராட்சி வார்டு - 5, பழைய பிளாக் எண்.29, பழைய T. சர்வே எண்.651 தொடர்புடைய புதிய வார்டு - A, புதிய பிளாக் எண்.20, புதிய T. சர்வே எண்.15 இல் அமைந்துள்ள எக்கர் 2.62 சென்ட்கள் அதில் கிழக்கு புறத்தில் உள்ள எக்கர் 0.60 சென்ட்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிலங்கள் அதில் உருவான மனைப்பிரிவின் மனைகள், அதில் மனை எண்.9 இன் கூட்டுப்பரப்பாவது 2166 சதுர அடி நிலம் அதனுள் அதில் கட்டப்பட்டுள்ள ஆஸ்பெஸ்டாஸ் மேற்கூரைகொண்ட வீடு, அதனைச் சார்ந்த அனைத்து நுண்பு மற்றும் பகுதி. எல்லைகள்: 20அடி வடக்கு தெற்காக சாலைக்கு கிழக்கில், T. சர்வே எண்.16 இல் அ